வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 2178 /ஆ1/2022, நாள் : 06.07.2022

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்விப்பணி – 01.01.2022-ன் நிலவரப்படி அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவிக்குப் பதவி உயர்வு / பணி மாறுதல் மூலம் நியமனம் செய்ய தகுதி வாய்ந்தவர்களின் முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் - சார்பாக

பார்வை: 1.சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.68209/சி1/இ1/2021, நாள். 01.07.2022.
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.04.07.2022.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் 01.01.2022-ன் நிலவரப்படியான அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்தவர்களின் முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்யும் பொருட்டு, தகுதி வாய்ந்த 29 நபர்கள் கொண்ட முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்யப்பட்டது இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது,

அரசாணை (நிலை) எண். 101, பள்ளிக்ல்வி (பட்ஜெட்-1) துறை, நாள். 18.05.2018-ன்படி பட்டதரி ஆசிரியர் முதுகலையாசிரயர்கள், உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் நியமனம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் 01.01.2022-ன் நிலவரப்படியான உத்தேச தேர்ந்தோர் பெயர் பட்டியலினை வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளித் தலையைசிரியர்களுக்கும் அனுப்பப்படுகிறது. முன்னுரிமைப்பட்டியலில் உள்ள அனைத்து ஆசிரியர்களின் பார்வைக்கு உட்படுத்தப்படுகிறது. எனவே, அவர்களது பணிவிவரங்கள் சரியாக உள்ளதா, முன்னுரிமை உரிய இடத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அவர்களது ஒப்புதலினை எழுத்து மூலம் பெற்று, சார்ந்த தலைமையாசிரியரின் மேலொப்பத்துடன் 2 நகல்களில் இவ்வலுவலகத்தில் 05.07.2022 மாலை 5.00 மணிக்குள் நேரில் அளிக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு பார்வை 2-ல் காணும் செயல்முறைக் கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டது.

மேலும், இது குறித்து இணைப்பில் காணும் விவரங்களின்படி கவனத்தில் கொண்டு செயல்படுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், இதுகுறித்த சார்ந்த தலைமையாசிரியர்கள் தனி முழுக்கவனத்துடன் செயல்படவும், இதனால் ஏற்படும் காலதாமதத்திற்கு சார்ந்த பள்ளித் தலைமையாசிரிர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னுரிமைப்பட்டியலில் உள்ள நபர்கள் தவிர்த்து பள்ளியில் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்தவர் எவரது பெயரும் விடுபடவில்லை என்ற சான்றினை 06.07.2022 மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக ஆ1 இருக்கைப் பிரிவு உதவியாளரிடம் சேர்த்திடும் பொருட்டு தனி நபர் மூலம் அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.
இணைப்பு- பார்வைக் கடித நகல் (ம) பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் , வே.மா.
நகல் – 1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்,
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)
2, சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர்(பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
//ப.த.//